மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

Thiru D. SANTOSHAM : At the beginning of this academic year in the Madurai Agricultural College one student having come to the hostel with bag and baggage left it because of objectionable forms of ragging. I do not want to describe those forms of ragging. Will the Government appoint some machinery, probably some wing of the Vigilance Department, to watch over these colleges at the time of the beginning of the academic year so that these forms of ragging which are objectionable may be brought to the notice of the Government at the earliest possible moment and effective steps taken to prevent even tragedies happening as it happened one year ago ?

மாண்புமிகு திரு வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த இழி விளையாட்டுக்கள் மூலம் மாணவர்கள் துன்புறுத்தப்படுகிற செயல்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்று அதற்குத் கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டது. நான்கு பொறியியல் கல்லூரி மாணவர்கள் கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். சென்ற ஆண்டில் அப்படிப்பட்ட சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. அதற்கான அறிகுறி தென்படும்போது, கல்லூரி முதல்வர்களே நடவடிக்கை எடுத்துக்கொண்டதால், அது தடுக்கப்பட்டது. சென்ற ஆண்டு கோவை மருத்துவ மனையில் மாணவர்கள் இதில் ஈடுபடும்போது, கல்லூரி முதல்வர் அதில் ஈடுபட்டு எச்சரிக்கை விட்டு தடுத்து நிறுத்தினார்கள். அதன் மூலமாக எந்த விடுதியிலிருந்தும் அப்படி நடைபெற்றதாகத் தகவல் இல்லை. பல்கலைக் கழகப் பதிவாளர் எல்லாக் கல்லூரி முதல்வர்களுக்கும் இவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சுற்றறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்த இழி கேளிக்கையில் ஈடுபட்டால், கடுமையான தண்டனை தந்து வெளியே அனுப்பப்படும் அளவுக்கு நடவடிக்கை எடுக்கும்படி சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எந்தச் சம்பவமும் நடைபெற்றதாகத் தகவல் இல்லை.

Thiru D. SANTOSHAM : May I point out that some of the affected students are not able to come forward openly and make a complaint because that will make the position still worse ? That is why I just wanted to know whether the Government would appoint some machinery like some wing of the Vigilance Department so that apart from the students, information might come to the notice of the Government and effective steps might be taken.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, யாராவது ஒருவர் அதைப் பற்றிய குறிப்பைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால்தான், அதைப் பரிசீலிக்க முடியும். பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டோம் என்று சொல்ல வேண்டும். பெற்றோர்கள் மூலமாக இது போன்ற குற்றச்சாட்டுகளைக் கொண்டுவரலாம். எப்படியாவது கொண்டு வரவேண்டும். இவற்றைத் தடுத்து நிறுத்த ஆங்காங்குள்ள விடுதிக் காப்பாளர்கள் ஓயாமல் கண்காணிப்பாக இருந்து வருகிறார்கள். அக்கம் பக்கம் பார்த்து யாரும் கண்டு கொள்ளாத வகையில்தான் இப்படிப்பட்ட கேளிக்கைகள், விளையாட்டுகளைச் செய்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் அதை கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

Christian Medical College, Vellore

*45. Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state —

(a) the amount paid to the Christian Medical College, Vellore by way of grant by the State Government during 1967-68 ; and

(*b*) the subjects in which the post-graduate courses are conducted in this College ?

கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி, வேலூர்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) வேலூரிலுள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரிக்கு 1967–68 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசினால் மானியமாகக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) இந்தக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்பில் நடத்தப்படும் பாடங்கள் யாவை ?

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : (*a*) Rs. 40,000.

(*b*) 1. M.D. Branch I—General Medicine.

2. M.D. Branch III-A.—Pathology Main and Bacteriology Subsidiary.

3. M.D. Branch III-B—Bacteriology Main and Pathology Subsidiary

4 M.D. Branch IV—Physiology Main and Biochemistry Subsidiary.

5 M D. Branch V—Pharmacology.

6. M.D. Branch VI—Paediatric Medicine.

7. M.D. Branch VII-A—Radio Diagnosis.

8 M.D. Branch VII-B—Radiotherapy.

9. M.D. Branch VIII—Anaesthescology.

10. M.D. Branch XI—Bio-chemistry.

11. D.M. Branch I—Neurology.

12. D.M. Branch II—Cardiology.

13. M.S. Branch I—General Surgery.

14. M.S. Branch II-A—Oto-Rhms Laryngology.

15. M.S. Branch III—Anatomy.

16. M.Ch. Branch I—Thoracic Surgery.

17. M. Ch. Branch II—Neuro Surgery.

18. M.Ch. Branch IV—Genito Urinary Surgery.

19. M.Sc. Branch I—Anatomy.

20. M.Sc. Branch II—Physiology.

21. M.Sc. Branch III—Bio-chemistry.

22. M.Sc. Branch IV—Pharmacology.

23. M.Sc. Branch V—Microbiology.

THIRU V. ISVARMURTI : The request of the Christian College to upgrade it as a University has been rejected by the University Grants Commission. The Government are contemplating the establishment of an Agricultural University and also a University for Technical Education. So, I think it will be the right moment to take up this question also so that the State may get more money from the University Grants Commission and the college also deserves such upgrading. Will the Government consider this poposal also ?

24th January 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே அந்தக் கல்லூரி நிர்வாகிகள் 'Home' யூனிவர்சிடியாக ஆக்க வேண்டு மென்ற விருப்பத்தைத் தெரிவித்து வருகிறார்கள். யு. ஜி. சி. அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப் பட்ட கல்லூரியாகத்தான் இருந்து வருகிறது. இங்கே இருக்கிற பல்கலைக் கழகமும் இசைவு தரவில்லை. யு. ஜி.சி. ஒப்புதல் தரவில்லை. அதற்கு ரூ. 40 ஆயிரம் மானியம் தரும் அளவில்தான் இருந்து வருகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, மாநில அரசு ரூ.40 ஆயிரம் மானியம் தருகிறது. அங்கே போஸ்ட்-கிராஜுவேட் தேர்வு செய்யும்போது மாநில அரசு பிரதிநிதி யாராவது தேர்வு செய்யும் குழுவில் கலந்துகொள்கிறார்களா ? எந்த முறையில் தேர்வு நடக்கிறது? அந்தக் குழு அவர்கள் பொறுப்பிலேயே விடப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதற்காகும் செலவு முழுவதையும் அவர்களே தான் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நான் சொன்னபடி கிட்டதட்ட 23 எம்.டி., எம்.எஸ்ஸி. பிரிவுகள் வைத்திருக்கிறார்கள். செலவும் ஏராளமாக ஆகிறது. ரூ. 40 ஆயிரம் ஏதோ ஒரு வகையில் மானியமாகத் தருகிறார்கள். தேர்ந்தெடுக்கும் முறையில் அவர்கள் பரிட்சை வைத்து, அகில இந்திய முறையில் மெரிட் அடிப்படையில் வைத்துத் தேர்ந்தெடுக்கிறார்கள். நம்முடைய பிரதி நிதிகள் யாரும் இல்லை.

THIRU D. SANTOSHAM : May I inform the Hon. Minister that this Rs. 40,000 represents merely a fraction of the total expenditure incurred on that college ? Has there been any request for increasing this grant in any form from this college at any time ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு எதுவும் இல்லை. தனிக் கேள்வி போட்டால், தகவல் சேகரித்துத் தரப்படும்.

Tamil Encyclopaedia

***46. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state —**

(*a*) whether any financial aid was given by the Government of Tamil Nadu for the compilation of Tamil Encyclopaedia after 1967 ; and

(*b*) if so, the amount so given ?

தமிழ்க் கலைக் களஞ்சியம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1967-ம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ்க் கலைக் களஞ்சியம் வெளி யிடுவதற்கு தமிழ்நாடு அரசினால் நிதி உதவி ஏதும் வழங்கப்பட்டதா ?

(இ) ஆமெனில் அவ்வாறு வழங்கப்பட்ட தொகை யாது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) தமிழ்க் கலைக் களஞ்சியம் வெளியிடும் பணி 1963-ஆம் ஆண்டிலேயே முடிவு பெற்று விட்டது. 1967-ஆம் ஆண்டிற்குப் பின் தமிழ்க் கலைக் களஞ்சியம் முதல் அனுபந்தம் வெளியிடுவதற்காக இவ்வரசு நிதியுதவியளித் துள்ளது.

(இ) இந்த முதல் அனுபந்தம் வெளியிட நிதியுதவி அளித்த தொகை ரூ. 46,500.